மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசே எடுத்துக்கொள்கின்ற ஆலோசனை இப்பொழுது இல்லை. இந்தத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக, நல்ல தொழிற்சங்கங்களை அமைத்து, அதன்மூலமாக அவர்கள் முறையிடுவார்களேயானால் அவர்களுடைய வாழ்க்கை முன்னேறுவதற்கு அது வழிவகை செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் மூலமாகத்தான் இவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தொழிற்சங்கங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஏதாவது சட்டம் இயற்றவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்— விவாதம்.

[முற்பகல் 10—50]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அமைச்சரவையின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம். திரு. ரா. உமாநாத்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது.''

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் மொழிந்த கண்டனத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.